REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணு இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆனிமீ 21௳ திங்கள் (5—7—54) வெளியூர்: ஆனிமீ 22௳ செவ்வாய் (6—7—54)	மலர்: 2 இதழ்: 18

பதினான்கு வயது சிறுமியை மணக்க!

மாஜிஸ்திரேட் முயற்சி!

பெண்ணின் தந்தை—மறு தார மாப்பிள்ளை செய்த சதி!

பாட்டனார் மனுவின் மீது மணத்தை தடை செய்ய நீதிபதி கட்டளை!

மாஜிஸ்திரேட்டுக்கு ஏழு பிள்ளைகள்! மூத்த பிள்ளையின் வயது 24!!

ஜூனகாத், ஜூலை 3—

ஒரு மாஜிஸ்திரேட், இரண்டாந்தாரமாக 14 வயதுடைய பெண்ணை மணக்க முனைந்தார். அந்தப் பொருந்தாத் திருமணத்திற்கு, பெண்ணின் தந்தையும் உடந்தை! பெண்ணின் பாட்டனார், மணத்தை தடை செய்யுமாறு சேஷன்ஸ் நீதிபதியிடம் மனு கொடுத்தார். மணத்தைத் தடை செய்ய நீதிபதி கட்டளை பிறப்பித்தார்.

மாஜிஸ்திரேட்க்கு ஏற்கனவே மணமாகி ஏழு பிள்ளைகளுக்குத் தந்தையாக இருக்கிறார். அந்த ஏழுவரில் மூத்தவனுக்கு வயது 24. முதல் மனைவி இறந்துவிடவே, சட்டத்தை மதிக்காது 14 வயது இளம் பெண்ணைத் தாரமாக்கிக்கொள்ள முன் வந்தார் மாஜிஸ்திரேட்.

16 வயது அடைவதற்குள் பெண்களுக்குத் திருமணம் முடிக்ககூடாது என்கிறது சட்டம்.

இப்படி ஒரு சட்டம் இருப்பதை, சாதாரண குடிமக்கள் அறிந்து கொள்ளாமல் இருக்கலாம்.

சட்டம் படித்து, வழக்குகளை விசாரித்து, குற்றம் கண்ட இடத்தில், சட்டம் கோரும் தண்டனையை விதித்து, நீதியைப் பாதுகாக்க இருக்கும் ஒரு மாஜிஸ்திரேட்டுக்கும், ஒரு பெண்ணின் மண வயது தெரியாமல் இருக்க நியாயமில்லை.

ஜூனகாத் நகரில் ஒரு முதல வகுப்பு மாஜிஸ்திரேட்; அவர் பெயர் சாந்திலால் பாபலால் மேரோ என்பதாகும்.

அவர், 14 வயதுடைய பெண்ணை மணந்து கொள்ள பரியம் போட்டுவிட்டார்; திருமண நாளும் நிச்சயிக்கப் பட்டுவிட்டது!

பெண்ணின் தந்தை மாஜிஸ்திரேட்டுடன் கூடிக்கொண்டு, சிறுமியின் திருமணத்திற்கு ஒப்பிவிட்டார்.

பெண்ணின் பாட்டனார், மணஞ் செய்துகொள்ள இருக்கும் பேத்தியின் இளம் வயதைக் காரணம் காட்டி, மணம் நடைபெறவொட்டாமல் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென, மனு கொடுத்தார்.

நீதிபதியும் திருமணத்தைத் தடை செய்துவிட்டு, பெண்ணின் எதிர்கால பாதுகாப்பாளர்களை உறுதிப்படுத்துவதற்காக, பெண்ணை நீதிமன்றத்திற்குமுன் கொண்டுவர உத்திரவிட்டிருக்கிறார்.

பெண்ணின் தகப்பனார், அவருடைய நன்மைக்கும், சுகத்துக்கும் எதிராக இருக்கிறதாகவும், அவளை எதிர்காலத்தில் பாதுகாக்கும் உரிமையைத் தனக்களிக்க வேண்டும் எனவும், பெண்ணின் பாட்டனார், நீதிபதியிடம் கோரிக்கை வெளியிட்டுள்ளார்.

மாஜிஸ்திரேட், ஏற்கனவே மணமாகி மனைவியை இழந்தவர் என்றும், அவருக்கு ஏழு பிள்ளைகள் இருப்பதாகவும், மூத்த மகனுக்கு 24 வயது ஆகிறது எனவும், சிறுமியின் மாமனார் கொடுத்த மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சிறு பெண்ணை, சட்டப்படி மண வயது அடையப் பெறாத சிறு பெண்ணை, மறு தாரமாகக் கொள்ள, சாதாரண குடிமகன் அல்ல — ஒரு மாஜிஸ்திரேட் ஆசைபடுகிறார்! வேலியே பயிரை மேயும் வேதனை தரும் விசித்திரம்!

நல்ல முயற்சி

ஜம்மு—காஷ்மீர் அரசாங்கம் காஷ்மீரில் உள்ள 675-க்கும் அதிகமான பள்ளிகள், கல்லூரிகளில் இப்போதிருப்பவர்களுடன் இன்னும் ஆயிரம் ஆசிரியர்களை அதிகப்படுத்துவதெனத் தீர்மானித்துள்ளனர். பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமாகத் தரவும் ரூ 1-லட்சம் ஒதுக்கியுள்ளனர்.

'ஆச்சாரியார் போலவே காமராசரும் ஜனநாயகத்தை கொலை செய்கிறார்'

—(:)—

'காங்கிரசிற்கு வெற்றி தேடவே இந்த சதி'

'வேலூர் தி. மு. கழக மாநாட்டுத் தீர்மானத்தை முதல் அமைச்சர் கருத வேண்டும்'

வாக்குப் பதிவு முறை மாற்றம் பற்றி கோவிந்தசாமி எம். எல். ஏ. விளக்கம்

"வரப்போகும் ஜில்லா போர்டு தேர்தல்களில் ஓட்டளிப்பதற்காகப் புகுத்தப்பட்டிருக்கும் புதிய முறையால் ஏற்படும் கேடுகளை, பலபல காரணங்களைக்காட்டி விளக்க முடியும். முதலாவதாக, இந்தப் புதிய ஓட்டு முறை இராசகோபாலாச்சாரியார் கொண்டுவந்த எதேச்சாதிகார புதிய கல்வித் திட்டத்திற்கு ஒப்பாகும். இந்தப் புதிய ஓட்டு முறையைப் பற்றி காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்திலேயோ அல்லது சட்டசபையிலேயோ பரிசீலிக்கப்படவில்லை. இந்த முறை, எதேச்சாதிகாரமான திட்டமென்பதைக் காமராசர் மறுக்க முடியாது. இந்தப் புதிய முறை சட்டசபை கலைந்த பிறகு கொண்டு வரப்பட்டது. தேர்தல் முடிந்த பிறகு சட்டசபை கூடப்போகிறது; ஆகவே, எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு தங்களுடைய கருத்தை வெளியிடுவதற்குச் சந்தர்ப்பமளிக்கவில்லை! காமராசர்கூட, ஜனநாயகத்தை, கொலைக்களத்திற்கு அனுப்புகிறார் போலும்!"

என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் அவர் கூறுவதாவது:—

"கடந்த தேர்தலில் காங்கிரஸ் பெருவாரியாகத் தோற்றதினால், வெளிப்படையாகச் சொல்ல வைத்து, காங்கிரசுக்கு ஓட்டு சேகரிக்கச் செய்யப்படுகிற சூழ்ச்சியாகும், இந்தப் புதிய முறை! இது ஏழை எளியவர்களுடைய சுதந்திரத்தைப் பறிக்கின்ற முறையாகும் என்று கருத இடமிருக்கிறது. இந்த முறை, பரீட்சார்த்தமாக தென்னாற்காடு ஜில்லாவில் திருக்கோவிலூர் வட்டத்தில் கையாளப்பட்டு வெற்றி பெறவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியும். வேண்டுமானால், அண்மையில் நடைபெறவிருக்கும் குடியாத்தம் தேர்தலில் இந்த முறையைக் கையாண்டு பார்க்கட்டும்—உண்மை விளங்கும்."

"இந்த அறிக்கை, வெறும் கண்டனத்திற்கு மட்டும் என்றே வெளியிடப்படவில்லை. இந்த முறை சரியல்லவென்று வேலூரில் நடைபெற்ற தி. மு. கழக மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, காமராசர் அவர்கள் உண்மையை உணர்ந்து, ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்."

தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள், மேலும் தனது அறிக்கையில் கூறுவதாவது:—

'வரப்போகும் ஜில்லா போர்டு தேர்தல்களில் ஓட்டளிப்பதற்காக புதிதாகப் புகுத்தப்பட்டிருக்கும், குறியிடும் ஓட்டுமுறை சிறந்தது,' என்று நிருபர்கள் பேட்டியில் காமராசர் கூறியதாக 'தினத்தந்தி'யில் படித்தேன்.

இந்த முறை சிறந்தது என்று வாதாடும் காமராசர் அவர்கள் மூன்று காரணங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்:-

1 பெட்டிகளை மாற்றுதல்;

2 ஓட்டுச்சீட்டுகளை மாற்றி அள்ளிப் போடுதல்;

3 ஓட்டுச் சீட்டுகளை வெளியே கொண்டுபோய் விற்பது இவைகளை தடுக்க புதிய முறை ஏதுவாக இருக்குமென வாதத்திற்காக கூறியிருக்கிறார்.

"பெரும்பாலான மக்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருக்கும்பொழுது இந்தப் புதிய கோடிடும் முறை எப்படிச் சாத்தியமாகும்?' என்று நிருபர்கள் கேட்டதற்கு, 'ஒரு கோடிந்டால் போதும்'மென்று கூறுகிறார். 'பென்சிலால் போடப்படும் கோடுகளை அழித்துவிட்டால் என்ன செய்வது?' என்று கேட்டபொழுது, 'அப்படி நடக்காது,' என்று காமராசர் கூறுகிறார். இதுவே, அவர், வாதத்திற்குக் காட்டும் காரணம்.

காமராசர் காட்டிய மூன்று காரணங்களும் காங்கிரஸ்காரர்களாலேயே பெரும்பாலும் கையாளப்படுவது தவிர எதிர்க் கட்சிகளால் அல்ல; ஆளும் கட்சிக்குத்தான் இத்தகைய தில்லுமுல்லு செய்ய வசதியிருக்கிறது. அதிகாரிகளைப் பயமுறுத்தி இத்தகைய காரியங்களைச் செய்திருக்கிறார்கள்; இதற்கு இணங்காத அதிகாரிகளைப் பல தொல்லைகளுக்கு ஆளாக்கியிருப்பது பொது மக்களுக்கு தெரிந்ததே!

இந்த நாட்டிலே நூற்றுக்கு 17 பேர்கள்தான் படித்திருக்கிறார்கள்; ஏனைய மக்கள் எழுத்து வாசனை அறியாதவர்கள்; எழுதத் தெரியாதவர்கள். படித்தவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டசபை உறுப்பினர்களும் கூட ஓட்டுப் பதிவு செய்கிற விஷயத்தில் (கோடிடுவதில்) தவறிவிடுகிறார்கள்; செல்லாத ஓட்டுக்கள் ஏராளம் ஏற்படுகிறது.

ஒரு கோடு போட்டால் போதுமென்கிறார் காமராசர்! —ஒரு கோட்டை எங்கே

(4-ம் பக்கம் பார்க்க)

ஒரிசாவில் அமைச்சர் தேர் இழுத்த காட்சி!

பூரி தேர் விழாவில் தமிழ் கவர்னர் 'தரிசனம்' கண்டாராம்!

மதச் சார்பற்ற மத சர்க்கார் இந்து விழாவில் கலந்துகொள்ளும் அநீதி

பூரி, ஜூலை 5—

இந்த ஆண்டு நடைபெற்ற ஜெகநாதர் தேர் விழாவில் ஒரிசா மாகாண கவர்னர் திரு. குமாரசாமி ராஜாவும் அவரது மனைவியாரும் கலந்துகொண்டு தேர் அருகே சென்று 'தரிசனம்' செய்தார்களாம்!

ஒரிசா முதலமைச்சர் நவகிருஷ்ண சௌத்ரி, மக்களோடு கலந்துகொண்டு தேரை இழுத்தாராம்!

பூரி தேர் விழாவில் இந்த ஆண்டு 1-லட்சம் மக்கள் கலந்து கொண்டார்களென்றும், இவர்கள் எல்லோரும் ஒரிசாவிலிருந்தே வந்தவர்கள்தான் என்றும் தெரிகிறது.

வெளிமாகாணங்களிலிருந்து பலர் வரவில்லையாம்! காரணம், ஏராளமான மக்கள் குருக்ஷேத்திரத்தில் நடைபெற்ற சூரிய கிரகணத்திற்கு சென்றுவிட்டதுதான் என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு

ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 5—7—54 திங்கள்

பொருந்தா விளக்கம்

மாவட்ட மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறுவது நிச்சயமாகிவிட்டது; தேதி குறிப்பிட வேண்டியதுதான் பாக்கி.

நமது நாட்டிலே தேர்தல் வருகிறதென்றால், அத்துடன் பல பிரச்சினைகள் உருவாவதுண்டு; அரசியல் விழிப்பும், கல்வி வளர்ச்சியும் அதிகமாக இல்லாத நாடுகளில் தேர்தல் நடைபெறுவதென்றால், தேர்தலில் கலந்து கொள்வோருக்கும் தேர்தலை நடத்தும் பொறுப்பை ஏற்க வேண்டிய சர்க்காருக்கும், தேர்தலில் வாக்களிக்க வேண்டிய வாக்காளர்களுக்கும், பல பிரச்சினைகள், சிக்கல்கள் எழலாம்—ஆனால் எல்லோரும், தேர்தல் ஒழுங்காகவும், நேர்மையுடனும் நடைபெற வேண்டும் என்பதை விரும்புவார்கள்—விரும்புவதுதான் உலகில் பல நாடுகளில் காணப்படும் நிலை.

அமைதியாக தேர்தல் நடைபெற வேண்டும்—கலவரமின்றி, ஆட்சியில் உள்ளோர் மீது மாசு ஏற்படாது தேர்தல் நடைபெற வேண்டும்—இப்படி ஆட்சியாளர்கள் எண்ணுவது இயற்கை—எண்ண வேண்டும்.

அண்மையில் நடைபெறப் போகும் மாவட்ட மன்றங்களின் தேர்தலில் வாக்குப் பதிவு செய்யும் முறையில் சென்னை சர்க்கார் புதியமுறை ஒன்றைப் புகுத்தியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இது பற்றி நமது கருத்து என்ன என்பதை முன்னர் ஒருமுறை குறிப்பிட்டிருந்தோம்.

இப்போது சென்னை சர்க்கார் முதல் அமைச்சர் காமராசர் இந்தப் புது முறை பற்றிய விளக்கமொன்றை நிருபர்களிடையே கூறியிருக்கிறார். வாக்குப் பதிவு சீட்டுகளில் அபேட்சகர்களுக்களிக்கப்படும் சின்னங்கள், அவரவர்கள் பெயர்களுடன் அச்சிடப்பட்டிருக்குமென்றும், அச்சின்னங்களை கவனித்து, தாங்கள் விரும்பும் அபேட்சகர்களின் பெயர்களுக்கு நேராக, வாக்காளர்கள் குறியிட்டால் போதுமென்றும் கூறியுள்ளார்.

குறியிடும்போது, மையினால் குறியிடவோ—மை தவறிவிட்டால் யாருக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது என்று நிச்சயமில்லாது போகுமாதலால பென்சிலால் குறியிட்டால் போதுமென்றும் அவர் மேலும் விளக்கம் தந்திருக்கிறார்.

மை சிதறி வாக்காளர் சீட்டு வீணாகாமல் இருக்க வேண்டுமென்ற கவலை சர்க்காருக்கு இருப்பது போல, நாட்டு மக்கள் நல்ல முறையில் பிறர் தயவுக்கும் தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல், தம் விருப்பப்படி வாக்களிக்க வசதி செய்ய வேண்டுமென்ற எண்ணமும் ஒரு பொறுப்புள்ள சர்க்காருக்கு இருந்தாக வேண்டும்.

பெட்டிகளின் மீது, சின்னங்கள் ஒட்டப்பட்டிருக்கும் போதே வோட்டுப் போடும் இடங்களில் காணப்பட்ட ஒளிக் குறைவாலும், வாக்காளர்களில் சிலருக்கு இருந்த கண் பார்வைக் குறைவாலும், வாக்காளர் விரும்பிய வண்ணம் வாக்களிக்க இயலாத நிலை சில இடங்களில் ஏற்பட்டதை பலர் அறிந்திருப்பார்கள்.

இப்போது வாக்குச் சீட்டிலே சின்னங்கள் அச்சடிக்கப்படுமானால் அச்சின்னங்கள் மிக மிகச் சிறியனவாக இருக்கும் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. வாக்குச் சீட்டிலே உள்ள சின்னம் மோட்டாரா, படகா, சைக்கிளா, ஒட்டகமா, ஆலமரமா, குடிசையா என்பதை வாக்காளர்கள் சரியானபடி கண்டு கொள்ள வாக்குச் சாவடியில் வாய்ப்பு இருக்குமா என்பதைச் சர்க்கார் உணர வேண்டும்.

இரண்டு அல்லது மூன்று பேர் போட்டியிடும் தொகுதிகளின் சின்னங்கள் தெளிவாகவும், அளவில் பெரியதாகவும் அச்சடிக்க இயலும்; அதைப் பார்த்துத் தெரிந்து கொள்வதே கடினமாகும். எட்டு பேர் அல்லது பத்து பேர் போட்டியிடும் தொகுதிகளின் சின்னங்களை தெளிவாகவும், பார்த்த உடனே, பார்வை பழுதுபடாத வாக்காளர்களால் அறிந்துகொள்ள இயலுமா என்பதை சர்க்கார் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இவை யெல்லாவற்றையும் விட, வாக்காளர்களைச் சுதந்திரமாக வாக்குப் பதிவு செய்ய இம் முறை பயன்படுமா என்று பார்த்தால், இம் முறை எல்லா விதத்திலும் அவர்களுக்கு நன்மை பயப்பதாய்க் காணோம்.

இம் முறை சிறந்தது என்பதற்கு கனம் காமராசர் கூறும் காரணம் பொருத்தமானதாக இல்லை.

இதனால் ஏமாற்றுதல், பெட்டி மாற்றுதல், வாக்குகளை வெளியே கொண்டுபோய் விற்பனை செய்வது போன்ற தவறான முறைகளைத் தடுக்க முடியுமென்று காமராசர் கூறியிருக்கிறார்.

சர்க்கார் புகுத்துகிற முறைகளால் மட்டும் ஒழுங்கான முறையிலே தேர்தல் நடைபெற்றுவிடாது.

ஆட்சி பீடத்தின் உச்சியிலே அமர்ந்து உத்தரவிடுகிற அமைச்சர்கள் முதல், அந்த உத்தரவை அமுல் செய்யும் அதிகாரிகள், சர்க்காரின் உத்தரவு சரியான முறையில் அமுல் செய்வதற்குப் பாதுகாப்பளிக்கும் போலீசார் வரையில் அனைவரிடமும் ஒழுங்கும், திறமையும் காணப்பட வேண்டும்.

தேர்தலில் போட்டியிடுவோர் உள்ளத்தில் நாணயமும்—நேர்மையும் இடம் பெற வேண்டும்.

வாக்காளர்களுக்கு இரகசியமான முறையில வாக்களிக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

இவ்வளவும் நடைபெற்றால் நாட்டிலே தேர்தல் ஒழுங்காக நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம்.

இப்போது சர்க்கார் கையாளப்போகும் புதிய முறையினால் வாக்காளர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

மாவட்ட மன்றத் தேர்தலில் வாக்குப் பதிவு இரகசியமான முறையில் யாரும் பார்க்காத இடத்தில் பெட்டி வைக்கப்பட்டு, குறியிட்டு வாக்குப் பதிவு செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்யப் போகிறார்கள் என்றால் வாக்குச் சீட்டுகளை வெளியில் கொண்டு வந்து விற்பனை செய்வதை எப்படித் தடுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் காமராசர், இப்புதிய முறையின் மூலம் வெளியில் வாக்குச் சீட்டுகளை கொண்டுவந்து விற்க முடியாதென்கிறார்.

இரகசியமான இடத்தில் குறியிட்டு பெட்டியில் வாக்குச் சீட்டுகளைப் போட அனுமதிக்காமல் சர்க்கார் அதிகாரி, அபேட்சகர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் குறியிட்டு, அவர்கள் கண்ணெதிரிலேயே பெட்டியில் போட வேண்டுமென்றால் வெளியில் சீட்டுகளைக் கொண்டு போவதைத் தடுக்க முடியும். ஆனால் இம்முறையில், வாக்காளர்கள், பலர் முன்னிலையில் எவ்வாறு தாங்கள் விரும்பும் அபேட்சகர்களுக்கு வாக்கிட இயலும்? எந்தச் சின்னத்தின் முன்னர் குறியிடுகிறோம் என்பதை யாரேனும் பார்த்துவிட்டால் என்ன செய்வது என்று வாக்காளர்கள் நினைத்தால் பலர் வாக்குப் பதிவு செய்ய வரவேமாட்டார்கள். சிலர், நமக்கேன் வம்பு என்று வீட்டிலேயே இருந்துவிடுவார்கள்.

எப்படிப் பார்த்தாலும், சென்னை சர்க்கார் மாவட்ட மன்ற தேர்தல்களில் புகுத்த இருக்கும் புதிய முறை சிறப்புடையதாக, சென்ற பொதுத் தேர்தலில் கையாளப்பட்ட முறையைவிட போற்றக் கூடியதாக இல்லை.

எழுதப் படிக்கத் தெரியாத வாக்காளர்கள் பலர் நிறைந்த நமது நாட்டில், இம்முறை வாக்குப் பதிவு செய்ய மக்களுக்குச் சுலபமான வழியைக் காட்டுவதாக இல்லை.

ஆகவே, சென்னை சர்க்கார், மாவட்ட மன்றங்களின் தேர்தலில் புகுத்த இருக்கும் புது குறியிடும் முறையை ரத்து செய்வதுதான் நேர்மை என்று கூறிக் கொள்கிறோம்.

கட்டாய இந்திக்காக கிளர்ச்சியாம்!

இந்தி ஆசிரியர் மாநாட்டில் பேச்சு

திருச்சி, ஜூலை 2—

"தமிழ் நாட்டில் இந்தியை எல்லோரும் கற்கும்படி செய்வதற்காக கிளர்ச்சி நடத்தவேண்டும்" என்று மலைவாசல் இந்தி பிரசார சபா கட்டிடத்தில் நடைபெற்ற இந்தி ஆசிரியர்கள் மாநாட்டில் அறிவிக்கப்பட்டதாம்.

"இந்திக்கு எதிர்ப்பு இருக்கிறதே என்று கவலைப்படத் தேவையில்லை; இந்திக்கு எதிர்ப்பு இத்தனை நாள் வரை இருந்தாலும், இன்று இந்தியை மற்ற மொழிகளுக்குச் சமமாக வைத்துள்ளார்கள்" என்றும் அம்மாநாட்டில் பேசினார்கள் என்று தெரிகிறது.

நெல்லை கடல் சங்குகளுக்கு மேற்கு வங்கத்தில் மார்க்கெட்!

வளையல்கள் செய்யப் பயன்படுகிறதாம்!

தென்காசி, ஜூலை 2—

திருநெல்வேலிக்கருகே கடலில் கிடைக்கும், சங்குகளை மேற்கு வங்காள சர்க்கார் விலைக்குக் கேட்டிருக்கிறதாம்.

இச்செய்தியை அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்தச் சங்குகளை வியாபாரிகள் மேற்கு வங்க சர்க்காருக்கு ஏற்றுமதி செய்யலாம், அல்லது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யலாம்.

மேற்கு வங்க சர்க்காரிடம் வியாபாரிகள் நேரடியாக விற்பனை செய்வதன் மூலம் அவர்களுக்கு சங்குகள் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய அகதிகளுக்கு இந்த சங்கு சப்ளை செய்யப்படும். அவர்கள் இதனைக் கொண்டு வளையல் செய்வார்கள்.

சங்குகளை நேரடியாகத் தங்களுக்கு விற்பனை செய்யுமாறு மேற்கு வங்க முதல் அமைச்சர் சென்னை சர்க்காரைக் கேட்டிருக்கிறார். இதுபற்றி அவருக்கு விரைவில் பதில் அனுப்பப்படும்.

பாலாறு தண்ணீர்—சென்னைக்கும், மைசூருக்கும் பிணக்கு

நீதி வழங்க குடியரசுத் தலைவருக்கு கோரிக்கை

திருச்சி, ஜூலை 2—

சென்னை, மைசூர் ராஜ்யங்களிடையே, பாலாறு தண்ணீரை பகிர்ந்து கொள்ளுவதில் ஏற்பட்டுள்ள தகராறுகளைத் தீர்த்து வைக்குமாறு கோரி; குடியரசுத் தலைவர் ராசேந்திரப் பிரசாதிற்கு மனு ஒன்று வந்துள்ளது.

மைசூர் மாநிலம், பாலாற்றின் தண்ணீர் முழுவதையும், அதனுடைய கிளைகளில் வடியும் தண்ணீரையும் சேர்த்து தன்னுடைய மாநிலத்திற்கே பயன் படுத்திக் கொள்கிறது.

இந்த இரு மாநிலங்களுக்கிடையில் இருந்த ஒப்பந்தத்தை மீறுகிற வகையில், மைசூர் மாநிலம், இந்த ஆற்றில் இருக்கும் அணைக்கட்டுகளின் உயரத்தை அதிகரித்துள்ளது, என்று அந்த மனுவில் கண்டுள்ளது. 1952-ல் தரப்பட்ட இதுபோன்ற ஒரு மனு எந்தவித பயனையும் தரவில்லை.

வேலையின்மையைப் போக்க ரூ. 48 கோடி திட்டம்

உத்திர பிரதேச சர்க்கார் கிராமங்களில் காணப்படும் வேலையின்மையைபோக்க ஆவன செய்வதற்காக புள்ளி விவரங்கள் சேர்க்கின்றனர்.

கிராமங்களில் வேலையற்றோர் தொகை என்னவென்று சர்க்கார் கணக்கெடுத்ததில் 60-லிருந்து 78 சதவீதத்தினர் வேலையின்றி உள்ளனர் என்று தெரிகிறது.

உத்திர பிரதேசத்தில், 120 கிராமங்களில், சர்க்கார், மக்களின் வருமானம் பற்றி விவரம் சேகரிக்கிறதாம்.

சரியான புள்ளி விவரங்கள் கிடைத்தாலன்றி வேலையின்மையைப் போக்க, சர்க்கார் எவ்விதத் திட்டத்தையும் வகுக்க முடியாதென்று சர்க்கார் நிபுணர்கள் கருதுகின்றனர். கிராமங்களில் புள்ளி விவரங்கள் சேகரிப்பது கடினமாக இருக்கிறதாம்.

உ. பி. சர்க்கார் வேலையில்லாதோருக்கு உதவ 48 கோடி ரூபாய்களுக்கான திட்டம் ஒன்றை மத்திய சர்க்காரிடம் தந்துள்ளதாம்.

பட்டம் தாணுப்பிள்ளை காங்கிரசில் சேருவார்!

நாகர்கோவில், ஜூலை 4—

திருவாங்கூர்—கொச்சி சட்டசபையின் கூட்டம் முடிந்ததும் பட்டம் தாணுபிள்ளையும், அவரது பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியும் காங்கிரசில் சேர்ந்து, காங்கிரஸ் மந்திரிசபை அமைக்குமென்று 'கேரள கௌமுதி' என்ற பத்திரிகையின் டில்லி நிருபர் எழுதியுள்ளார்.

இக் காங்கிரஸ் மந்திரி சபைக்குப் பட்டம் தாணுப் பிள்ளையே முதன் மந்திரியாக இருப்பார்; ஆனால் பி. சோ. கட்சி காங்கிரசில் சேருவதை நிதி மந்திரி பி. எஸ். நடராச பிள்ளை எதிர்க்கிறார். திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரசுடன் பிரஜா-சோஷலிஸ்டுகள் சேருவதை நடராஜ பிள்ளை ஆதரிக்கிறார்.

கண்ணாடி உடையாமல் இருக்கப் புது வழி!

"சிலிகோன் எமல்ஷன்" என்ற பொருளைப் பூசினால் கண்ணாடி டம்ளர்கள் உடையாமல் இருக்குமெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனைத் தடவினால் கீழே விழுந்தால் உடையும் டம்ளர்கள் நூற்றுக்கு ஏழாகக் குறையும். பால் புட்டிகள், குழந்தைகளுக்கு உணவு வைக்கப் படும் கண்ணாடி புட்டிகள், பழச்சாறு புட்டிகள் இவைகளில் இது பூசப்படுகிறது.

லண்டன் எழுப்பும் மாளிகைகள்!

லண்டன், ஜூலை 1—

அரசாங்க நிபந்தனைகள் தளர்த்தப்பட்டதிலிருந்து பிரிட்டன் ஆயிரக்கணக்கான மாளிகைகளை எழுப்பி வருகிறது.

லண்டன் நகரில் மட்டும் இந்த வருடத்தின் நான்கு மாதங்களில் சராசரியாக 28,760,000 பவுன்களைப் புதிய கட்டிடங்கள் எழுப்புவதற்காகச் செலவிடப் பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் இந்த மாதங்களில் சராசரியாக, 25,000,000 பவுன்களே செலவிடப்பட்டன!

கட்டிடச் சாமான்கள் விற்பனை செய்பவர்கள், தேவைகளைப் பூர்த்தி செய்யத் திணறுகிறார்களாம்.

செங்கல் மட்டும் சென்ற ஆண்டில் 7,200,000,000 உற்பத்தி செய்யப்பட்டது. இந்த ஆண்டு, 7 500,000,000 ஆக இருக்கும் எனத் தெரிகிறது. இது 1938-ல் தயாரிக்கப்பட்ட எந்தக் காலத்திலும் இல்லாதது என்று சொல்லப்பட்ட, 8,000,000,000, செங்கல்களைக் காட்டிலும் சிறிய அளவே குறைந்த உற்பத்தியாகும்.

இந்த ஆண்டு சிமெண்ட் மட்டும் 12,300,000 டன்கள் உற்பத்தியாகும், இதில் 2,000,000 டன்கள் ஏற்றுமதிக்காக ஒதுக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

திருமதி ஜெகனுக்கு அபராதம்

போலீஸ் இலாகாவின் இரகசிய சுற்றறிக்கை ஒன்றை வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு மக்கள் கட்சிச் செயலாளர் திருமதி ஜகனுக்கு 30 பவுன் அபராதம் விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து அப்பீல் செய்யப்படும் எனத் தெரிகிறது.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

முத்துப்பேட்டை

25—6—54ல், ஏ. எஸ். என். திடலில் மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் க. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். எம். கலியன் பன், இரா. நடராசன், டாக்டர் டி. என். சிவசங்கரன், எஸ். அப்பாவு, ஈ. வே. கி. சம்பத் ஆகியோர் பேசினர். கூட்டம் துவங்குவதற்கு முன்னர் டி. டி. பி. ரோடு பாலத்தடியிலிருந்து சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாக கூட்டத் திடல் வந்தடைந்தது.

தோழர் சம்பத் பேசுகையில், வெளி நாட்டானை தலைவனாகக் கொண்ட கம்யூனிஸ்டுகளின் தற்கால தகாத போக்கு, மத்திய சர்க்காரின் மாற்றாந் தாய் நடவடிக்கைகள், இலங்கை வாழ் தென்னவரின் நிலை, அதிகள் செலவால் அன்னி இறைக்கப்படும் பணம், ஆகியவை பற்றி எடுத்துரைத்தார். திராவிட நாடு திராவிடர்க்கே ஆனால்தான் இந் நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு ஏற்படும் எனவும், இதற்காகவே தி. மு. கழகம் பாடுபட்டு வருவதாயும் குறிப்பிட்டார்.

★

ஆயக்காரம்புலம்

28—6—54ல், ஆயக்காரம்புலம் 2வது பிரிவு தி. மு. கழகச் சார்பில், ஊராட்சி மன்றத்திற்கு எதிரில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் எஸ். அப்பாவு தலைமையில் நடைபெற்றபோது அவர் கழகக் கொடியை ஏற்றி வைத்துத் திராவிட நாடு பிரிவதன் அவசியம் குறித்தும், சென்ற ஆண்டு நடந்த அறப்போர் பற்றியும் குறிப்பிட்டார். அடுத்து வேதாரண்யம் தோழர் வி. கிருட்டிணன் பேசினார். பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் ஆரியரால் திராவிட மக்களின் வாழ்வு சிதைந்துவிட்ட வரலாற்றினையும், ஆரியமாயையினின்று மக்கள் விலகும் வழியினையும் அதற்காக அறிவியக்கம் ஆற்றி வரும் அருந்தொண்டினையும், அரசியல், பொருளாதாரத்தை விட சமுதாய அறிவு வளர்ச்சியில் தி. மு. க. அதிக அக்கரை காட்டுவதன் மூலகாரணத்தையும் விளக்கிப் பேசினார்.

★

ஏனங்குடி

22—6—54 மாலை 7 மணிக்கு ஏனங்குடி பள்ளிக்கூடத்திற்கு எதிரில் "புரட்சிக் கவிஞர் பூங்கா"வின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. லவ்வாலடி எஸ். எம். அலிஸா தலைமை வகித்தார். தோழர்கள் பட்டுக்கவரம், எல். டி. கிட்டப்பா, பட்டுக்கோட்டை சவுரிராஜன், என். அப்பாவு, ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் தி. மு. க. கொள்கைகளை விளக்கியும், ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்தும், தென்னாடு வடநாட்டு பிடியிலிருந்து விடுபட வேண்டியதின் அவசியத்தைக் குறித்தும் பேசினர்.

கூட்டத்தில் சயத்தூர் வி. மாசிலாமணி அவர்களால் 51-காலணுக்கள் ஆத்தக்குடி சதி வழக்கிற்காக தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

★

குருவிக்கரம்பை

26—6—54ல், தி. மு. கழகச் சார்பில், குருவிக்கரம்பை மடத்திற்கு எதிரில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் ஏ. இராமையன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அடைக்கலம், வடிவேல், இலங்கை கலாநேசன், அப்பாவு ஆகியோர் பேசியபின், தோழர் ஈ. வே. கி. சம்பத் இன்றைய அரசியல் நிலையும், மக்களின் மூடநம்பிக்கையும் பற்றி சொற்பொழிவாற்றினார்.

தலைஞாயிறு

மாயூரம் வட்டம் தலைஞாயிறு தி. மு. கழகச் சார்பில் 29-6-54 மாலை 6-30 மணிக்கு தோழர் வி. பொன்னையன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் என். கிட்டப்பா தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், தோழர் எஸ். அப்பாவு பொதுவுடைமையின் தற்கால போக்கினைச் சித்தரித்தும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் நாட்டு மக்களின் இன்னல்கள் நீங்க நாட்டுப் பிரிவினையே தக்க வழி என்பதை விளக்கியும் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் வி. என். சந்திரகாசன், மணல்மேடு ஷேக்தாவுத் ஆகியோரும் பேசினர்.

★

இலுப்பப்பட்டி

25—6—54ல், பாபநாசம் கிராமத்தைச் சேர்ந்த இலுப்பப்பட்டி ஊர் மைதானத்தில் தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. ராமசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். ரெங்கசாமி கொடியேற்றுவித்தார். தோழர்கள் கே. எம். ராமன், ஏ. ராஜகோபால், பி. சென்னமுத்து, இரா. அரங்கநாதன், ஆர். எம். கவி. கே. கிட்டன், எம். கே. ஏ. சாமி ஆகியோர் பேசினர். தோழர் குமரவேல் நன்றி கூறினார்.

★

மீஞ்சூர்

27—6—54 மாலை மீஞ்சூர் தி. மு. கழகச் சார்பில், தோழர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கணேசன், காதர் இயக்கப் பாடல்கள் பாடினர். தோழர்கள் டி. இராமசாமி, புலிபரசன், எஸ். எஸ். தென்னரசு, வி. சிவப்பிரகாசம் ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகள் பற்றியும், திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியம் குறித்தும் பேசினர்.

★

நாகை

13—6—54 மாலை 6-30 மணிக்கு நாகை அவுரித் திடலில், நாகை தி. மு. கழகச் சார்பில் கே. கே. சித்ரவேல் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் இரா. ஜெயச்சந்திரன் தி. மு. கழகத்தின் கொள்கை குறித்து விளக்கினார். அடுத்து தோழர் சிற்றம்பலம் மணியம் திராவிட நாடு பிரிவினை பற்றியும், தி. மு. கழகத்தின் வளர்ச்சி பற்றியும் விரிவுரையாற்றினார்.

அரண்மனைக்குறிச்சி

அரண்மனைக்குறிச்சி தி. மு. கழகச் சார்பில், 26—6—54 மாலை 6 மணிக்கு அரண்மனைக்குறிச்சியிலும், 27—6—54 மாலை 6 மணிக்கு திருமழபாடியிலும் தி. மு. கழகப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றது. தோழர்கள் எம். எஸ். மணி, எஸ். செழியன் மாறன், திட்டக்குடி எம். பொன்னம்பலம் ஆகியோர் தி. மு. கழக இலட்சியங்களைப் பற்றி விரிவுரையாற்றினர்.

★

காவிரிப்பூம்பட்டினம்

15—6—54 மாலை 6 மணிக்கு தருமகுளக் கடைவீதியில் தோழர் கே. கணேசன் தலைமையில் தி. மு. கழகச் சார்பில், ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். வி. நடராசன், என். கிட்டப்பா, கே. எஸ். சவுந்திரராசன், சீர்காழி ஒளி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :— செயலாளர்: கே. கணேசன்; துணைச் செயலாளர்: ஜி. சண்முகம்; பொருளாளர்: சி. சாம்பசிவம்; மாவட்டப் பிரதிநிதி: எஸ். ஜி. புருடோத்தம்; விளம்பர உறுப்பினர்: கே. வெங்கடகிரி; செயற்குழு உறுப்பினர்களாக இருபது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

★

நாச்சியார்கோயில்

6—6—54ல், கீழவீதி தேரடி அருகில் தி. மு. கழகச் சார்பில் கருப்பூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் ஜி. நாராயணசாமி தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தில்லை வில்லாளன், வலங்கை, அரங்கண்ணல், அறிவழகன் ஆகியோர் கழக இலட்சியங்கள் பற்றி பேசினர்.

குறிப்பு:—கடந்த 6—6—53ல் தோழர் என். வி. நடராசன் வந்தபோது கூட்டம் தடைப்பட்ட பிறகு 6—6—54ல் அதே பொதுக் கூட்டம் நடத்தி முடிக்கப்பட்டது என செயலாளர் பாண்டுரங்கன் தெரிவிக்கிறார்.

★

பெங்களூர்—பிளாக்பள்ளி

27—6—54 மாலை 5 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் வி. பி. சிற்றரசு கழக இலட்சியங்களை பற்றி விரிவுரையாற்றினார். ஆரம்பத்தில் தோழர்கள் இ. சோழன், வ. அரங்கசாமி ஆகியோர் பேசினர்.

செய்திச் சுருள்

★

வேதாரணியம் சிந்தனைப் படிப்பகம்

20—6—54ல், படிப்பகச் செயற்குழு கூட்டம் தோழர் மறைமணி தலைமையில் நடைபெற்றபோது, புதிய கல்வித் திட்டத்தை ஒழித்த காமராசரைப் பாராட்டியும், இலங்கையிலுள்ள இந்தியர்களை இந்தியத் தூதுவராலயம் இந்தியப் பிரஜைகளாக பதிவு செய்வதை நிறுத்தி விடுவதைக் கண்டிப்பதுடன், அங்குள்ள இந்தியர்களுக்கு பிரஜா உரிமை அளிக்கும்படி வற்புறுத்துகிறது, மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முத்தமிழ் மன்றம்

27—6—54 காலை 10-30 மணியளவுக்கு புதுக்கோட்டை டவுன் ஹாலின் தையல் நிலையக் கட்டடத்தில், முத்தமிழ் மன்றத்தின் செயற்குழு கூட்டம் தோழர் கே. வி. பதி தலைமையில் நடைபெற்றபோது 'சமூக சிதைவு' என்னும் நாடகத்தை மன்றத்தின் முதல் நாடகமாக நடிப்பதென்றும், மன்ற நாடகங்களில் கிடைக்கும் தொகையை தமிழ் வளர்ச்சிக்காகவும், ஏழை மாணவர்களின் கல்வி நிதிக்காகவும் உதவுவதென தீர்மானிக்கப்பட்டது.

சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

தாராவு, (பம்பாய்) ஜூலை 3—

30—6—54ல் மாலை 5 மணியளவில் தோழர் சா. தர்மராஜ் தலைமையில் மன்ற உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, வரவு-செலவு கணக்கும், நடிதப் போக்குவரத்தும் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், படிப்பக நிதிக்காக "இன்ப இரவு" என்ற நாடகத்தை நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கோழியூரில்

23—6—54 மாலை 6 மணிக்கு கோழியூர் (திட்டக்குடி) திரு வி. க. திடலில் பி. லெட்சுமணன் தலைமையில், தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சு. சுப்பரமணியன், பொதுவுடைமையர் போக்கு பற்றிப் பேசினார். தோழர் தி. கொ. சிங்காரம் கொடி ஏற்றிவைத்தார். பின்னர் தொ. பிச்சமுத்து, பெருமாள், ம. பொன்னம்பலம், சி. முனுசாமி ஆகியோர் பேசியபின், தோழர் சி. பி. சிற்றரசு அமைச்சர் பதவி ஏற்றுள்ள எஸ். எஸ். ராமசாமி போக்கு பற்றி விரிவுரையாற்றினார்.

'விகடன்' துவக்க விழா

17—6—54ல் 'விகடன்' என்ற திங்கள் ஏட்டின் துவக்க விழா பம்பாய் சவுந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றப் பணிமனையில், தோழர் இரா. வளர்மதி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. எம். கண்ணன் விழாவைத் துவக்கி வைத்தார்; செ. காபிரியேல் வரவேற்புரையாற்றினார்; சா. தர்மராஜன் ஏட்டைத் துவக்கி வைத்தார்; தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

விருந்தளிப்பு

ஆத்துக்குடி சதி வழக்கில் இணைக்கப்பட்ட வேம்புரம் தோழர் பி. ஆத்திமுத்துவுக்கு ஆத்தக்குடி வேம்புரம் வாசிகளால் 20—6—54 காலை 9 மணிக்கு விருந்தளிக்கப்பட்டது. தோழர்கள் காசி, பி. கே. துரைசாமி கலந்துகொண்டனர். புதுக்கல்வி திட்டம் ஒழிந்தது குறித்து சிறுவர்களுக்கு தேநீர் வழங்கப்பட்டது.

ஃ ஃ ஃ

அன்று மாலை திராவிட இளைஞர் முற்போக்கு இயக்க சார்பில் பிரசார வகுப்பு நடைபெற்றது. தோழர் செல்வராஜ் "சொல்லும், செயலும்" என்பது பற்றி பேசினார்.

திருமணங்கள்

20—6—54 இரவு 8 மணிக்கு திருவாரூர் வெண்சங்கு சேக்காப் அள் இல்ல நிலையத்தில் தோழர் செ. முத்துசாமிக்கும் — தோழியர் காளியம்மாளுக்கும் கலப்பு திருமணம் தோழர் அய்யாசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ச. கருப்பசாமி, மு. க. சமரசபாண்டியன் கலப்புத் திருமணத்தின் அவசியம் பற்றிப் பேசினர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது-வரப்பெற்றோம்—நன்றியுடையது-போதப்பாளர்.

• • •

21—6—54 திங்கள் காலை 6 மணிக்கு பொதக்குடியில் தோழர் அப்துல் ஜப்பாருக்கும்—தோழியர் பாத்திமா பீபீக்கும் திருமணம் நடைபெற்றது. அன்று மாலையும், மறுநாளும் இசையரங்குகள் நடைபெற்றன. தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

* * *

27-6—54ல் சிதம்பராபுரத்தில் தோழியர் ரா. ஜானகி—தோழர் ஆமார்பாலி சீர்திருத்தத் திருமணம் மணமகள் இல்லத்தில் தோழர் ப. தில்லையின் தலைமையில் நடைபெற்றது. இதன் நினைவாக மணமக்களால் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது — பொறுப்பாளர்.

• • •

வெஞ்சமடை இயக்கத் தோழர் சு. காட்டுராயனுக்கும்—தோழியர் பா காளியம்மாளுக்கும் 4—6—54ல் நடைபெற்ற திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது-வரப்பெற்றோம்-நன்றியுடையது-போறுப்பாளர்.

* * *

21—6—54 காலை, சென்னை வண்ணைபம்பதி திபாகராயர் நல் ஆலயில், மயிலை சிவமுத்து தலைமையில், டாக்டர் தருமாம்பாள் அம்மையாரின் பெயர்த்தியும் தோழர் ஜி எம். சமரசத்தின் மாலுமான தோழியர் மங்கையர்க்கரசிக்கும்—தோழர் அங்குசாமிக்கும் திருமணம் நடைபெற்றது. அன்று மாலை எம். கே. தியாகராஜ பாகவதர் இன்னிசை நடைபெற்றது. தோழர் அன்பழகன் மணமக்களை பாராட்டிப் பேசினார்.

மறைந்த மாவீரன் உடையார்பாளையம் வேலாயுதம் திருமகள்
தோழியர் மங்கையர்க்கரசி — தோழர் ராமச்சந்திரன்

★ எங்கள் நன்றி

★

"13—6—54 காலை, சாடிஜனத்தில் நடைபெற்ற எங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு வந்திருந்து சிறப்பித்த தி. மு. கழகப் பொதுச்செயலாளர் திரு. அண்ணாதுரை அவர்களுக்கும், தலைமை வகித்த தோழர் பூவராகசாமி, எம். பி., அவர்களுக்கும், சொற்பொழிவாற்றிய தோழர்கள் மு. கருணாநிதி, அ. பொன்னம்பலனார், தமிழாசிரியர் பொன்னம்பலனார் ஆகியோருக்கும், வாழ்த்துக்கள், பரிசுகள் அனுப்பிய பெரியோர்களுக்கும், திருமணத்திற்கு வருகைதந்து சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இரா. மங்கையர்க்கரசி
க. ந. இராமச்சந்திரன்

உலக அரங்கில்

பாரிஸ் :

இந்தோ-சீனாவில், முன்னறிவிப்பு எதுவுமின்றி, பிரெஞ்சுத் துருப்புகள் வாபஸ் பெறப்படுவது, சூ-என்-லாய், மெண்டே பிரான்ஸ் ஆகிய இருவரிடையே ஏற்பட்ட இரகசிய ஒப்பந்தத்தால் ஏற்பட்ட விளைவாக இருக்கலாம் என்று அமெரிக்கா சந்தேகப்படுகிறது.

* * *

மொராக்கோவில் சர்க்காருக்கு எதிராக எழும்பியுள்ள கலகத்தைச் சமாளிப்பது பற்றி பிரெஞ்சுப் பிரதமர் மெண்டே பிரான்ஸ் அதிகாரிகளுடன் கலந்து பேசினார்.

★

சைகோன் :

வடக்கு வியட்நாம் கவர்னர் தனது பதவியை இராஜிநாமா செய்துவிட்டார் என்று தெரிகிறது. கவர்னர் பதவிக்கு வேறு ஒருவரை நியமிப்பதைக் காட்டிலும் நிர்வாகக் கவுன்சில் ஒன்றை ஏற்படுத்தலாம் என்று பிரதமர் டீகோ டின் கருதுகிறார்.

★

ஹாண்டுராஸ் :

குவாடிமாலாவின் இராணுவ சர்க்கார் இரண்டு நாட்களுக்கு ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்தியிருக்கின்றனர். மக்கள் வெளியில் செல்லலாமென்றும், மோட்டார் முதலிய வாகனங்கள் செல்லலாமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★

ஜார்ஜ்டவுன் :

பொது மக்கள் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் செல்வி ஹியூபர்ட் மரணத்தை ஒட்டி சவ ஊர்வலம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான நீக்ரோக்களும், இந்தியர்களும் கலந்து கொண்டனர். இவர் ஜூலை 2-ந் தேதியன்று மரணமடைந்தார்.

★

அங்காரா :

இஸ்தான்புல்லில் உள்ள கிரிமினல் நீதிமன்றம் கிரேக்க இளைஞன் ஒருவனுக்கு, கிறித்தவக் கான்வென்டில் உள்ள இரண்டு பெண்களைக் கொலை செய்தமைக்காக எட்டாண்டு தண்டனை விதித்தது.

★

லண்டன் :

லிபியாவின் முதல் அமைச்சர் முஸ்தபா பென் ஹலீம் அமெரிக்கா செல்லும் வழியில் லண்டன் வந்து சேர்ந்தார். அவர் பிரிட்டிஷ் உள்நாட்டிலாகா அமைச்சர் லாயிடைச் சந்திப்பார் என்று தெரிகிறது.

★

ஹியூடன் :

பிரிட்டனின் முன்னாள் தொழில் அமைச்சரான ஹோரல்டு வில்சன், மாஸ்கோவைவிட்டு திரும்பும் போதும் சோவியத் போரை விரும்பவில்லை என்பதை அறிந்து கொள்வார்கள் என்றார்.

★

வாஷிங்டன்

அமெரிக்கா கம்யூனிச எதிர்ப்புப் பிரசாரத்திற்குப் புது முறை ஒன்றைக் கையாளுகிறதாம். 'அமெரிக்கா ஒரு காட்டுமிராண்டிகளின் நாடு' என்று பிரசாரம் செய்ய ரஷ்யா ஏராளமாக பணம் செலவிடுகிறது என்று அமெரிக்கச் செய்தி கூறுகிறது.

★

ஜெருசலம்

மூன்று நாள் போருக்குப் பிறகு இஸ்ரேல் அரபு எல்லையில் அமைதி நிலவுகிறது. கடைசி முறையாக நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பேர் மரணமடைந்தனர் என்று தெரிகிறது.

மாஸ்கோ :

காலஞ் சென்ற சோவியத் தலைவர்களுக்கு ஞாபகச் சின்னமொன்று அமைக்க சிறந்த முறையில் 'மாதிரி ஞாபகச் சின்னமொன்றை' வரைந்து தருவோருக்கு 2,50,000 ரூபிள்கள் பரிசு தரப்படும் என்று சோவியத் சர்க்கார் அறிவித்திருக்கிறது.

★

வியான்ஸ் :

பிரான்சின் டீசல் ரயில் ஒன்று விபத்துக்குள்ளாகியதால் 33 பேர் மரணமடைந்தனர் என்றும், 50 பேருக்குக் காயம் ஏற்பட்டதென்றும் தெரிகிறது.

★

நைரோபி

நைரோபியில் கலகக்காரர்கள் ஒரு ஹோட்டல் உரிமையாளரையும், இரண்டு ஆப்பிரிக்க ஹோம் கார்டுகளையும் கொன்றனர் என்று நைரோபி போலீசார் அறிவிக்கின்றனர்.

★

ஜோகன்ஸ்பர்க்

மலைஜாதி மக்கள் பீர் கடை ஒன்றில் தங்களுக்குள் கலகம் செய்து கொண்டனர்; மூன்று ஆப்பிரிக்கர்கள் மரணமடைந்தனர்; 50 பேர் காயமுற்றனர்; போலீசார் தலையிட்ட பின்னரே அமைதி ஏற்பட்டதாம்.

★

டைப்பே

பசிபிக்கில் உள்ள மற்ற நாடுகளுடன் அமெரிக்கா செய்து கொண்டுள்ள ஒப்பந்தம்போல் அமெரிக்காவும்—தேசிய சீனாவும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதற்காக ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள வேண்டுமென்று ஜெனரல் வான் பிளீட் கூறினார்.

★

சியோல் :

அமெரிக்க ஐக்கிய நிதியின் அழைப்பின் பேரில் சிங்மன் ரீ அமெரிக்கா செல்வதா வேண்டாமா என்பதை இன்னும் முடிவு செய்யவில்லையாம்.

★

ஹாங்காங் :

'நேரு—சூ-என்-லாய் பேச்சுக்கள் ஆசியாவிலும், உலகமெங்கும் சமாதானத்தை நிலைநாட்ட மிகவும் பயன்பட்டது,' என்று சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் தினசரி 'பீப்பிள்ஸ் டெய்லி' எழுதியிருக்கிறது.

★

டோக்கியோ :

தான் தரவேண்டிய கடனுக்கான காலவரையை நீடிக்குமாறு இந்தோனேஷியா, ஜப்பானைக் கேட்டிருக்கிறது. ஜப்பானுக்கு இந்தோனேஷியா 1,17,00,000 டாலர்கள் தரவேண்டியிருக்கிறது.

ஆபாச புத்தகம் வெளியிட்டதாக !

ஸ்ரீமகள் பிரஸ் உரிமையாளர் ரூ. 200 ஜாமீன் கட்ட உத்தரவு

"திருமணத் தம்பதிகளுக்கு" என்ற புத்தகத்தில் ஆபாசமான வர்ணனைகள் இருப்பதாகக் குறிப்பிட்டு அந்தப் புத்தகத்தைப் பிரசுரித்த ஸ்ரீமகள் பிரஸ் உரிமையாளரான எஸ். பிரான்சிஸ் என்பவரிடமிருந்து ரூ 1000 ஜாமீன் வசூலிக்க உத்தரவு கோரி சென்னை போலீஸ் கமிஷனர் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த பிரதம மாகாண மாஜிஸ்திரேட் 'திருமணத் தம்பதிகளுக்கு' என்ற புத்தகத்தைப் பிரசுரித்ததற்காக ரூ 200 ஜாமீன் கட்ட வேண்டுமென்று உத்தரவிட்டார்.

ஆச்சாரியார்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போடுவது? எங்கேப் போடுவது?—என்பது படிக்காத பாமரர்களுக்கு எப்படித் தெரியும்?

அந்த ஒரு கோட்டையே இரண்டு வாக்காளர்களுக்கு மத்தியில் போட்டு விட்டால் அந்த ஓட்டு செல்லாது; பென்சிலால் கோடு போட்டால் பல தொல்லைகள் ஏற்படும்; எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் பென்சிலை உபயோகித்தால் பென்சில் கூட உடைந்துவிடும்; அதிகாரிகளுக்கும் பெரும் தொல்லை; ஓட்டுகளும் அதிகமாகப் பதிவாகாது.

ஆண்களுக்கே இந்த நிலை என்றால், பெண்களுக்குச் சொல்லத் தரமன்று!

சில்கனா உடைப்பதும், ஓட்டு கூடுகளைத் திருடுவதும் சர்வசாதாரணமென்று கூறும் காமராசர், பென்சில் கோடு அழியாது என்று எப்படி உத்தரவாதமளிக்க முடியும்?

இந்த முறையால், பிற்பட்ட இனத்தாரும் ஆதித்திராவிடர்களும் அதிகம் பாதிக்கப்படுவர்.

இதற்குச் சான்றாக, முதலமைச்சரான மந்திரியாக இருக்கும் ராமசாமி அவர்கள் மந்திரி ஸ்தானத்தில் இருந்து கொண்டு இந்த முறை சரியென்று வாதாடுகிறார்; ஆனால் வன்னிய சமாஜத் தலைவர் என்ற முறையில் 20—6—54-ல் திண்டிவனத்தில் நடந்த மாநாட்டில், இந்தப் புதிய தேர்தல் முறையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்.

"இந்தப் புதிய முறையானது முன்பொரு சமயத்தில், தவறென்று கருதிக் கைவிடப்பட்டதாகும்!

இந்தக் கோடிடும் முறை கஷ்டமானதும், பல தொல்லைகளை கொடுப்பதாகவும் இருந்ததினால் தான் வர்ணப் பெட்டிகளும், சின்னங்கள் தீட்டிய பெட்டிகளும் வந்தன!

அந்த முறையில் கூட பொது மக்கள் சரியாக ஓட்டளிக்க முடியாமல், பெட்டி மீது ஓட்டளித்தவர்களும், இரண்டு பெட்டிகளுக்கிடையே ஓட்டைப்போட்டுச் சென்றவர்களும் ஏராளம்.

இந்தப் புதிய முறையால் இரகசிய முறை கையாளப்படவில்லை.

ஓட்டுப் போடுவதிலும் தாமதமாகும். ஓட்டு எண்ணுவதிலும் காலதாமதம் ஏற்படும். அதிகாரிகளும், பலசாலிகளும், குறிப்பிட்ட கட்சிக்கு ஓட்டளிக்குமாறு மறைமுகமாக ஓட்டுச் சேகரிக்க செய்யும் தந்திரமாகும் இது?

நெய்வேலியில் கண்டன ஊர்வலமும் பொதுக் கூட்டமும்

தோழர் வி. சண்முகசுந்தரம் அவர்களது தலைமையில் நாலு கட்சிகளையும், நிர்வாகமுறை நாசத்தையும் அக்கட்டமைப்பாக தடுப்பதைக் கண்டிக்க 1-7-54 மாலை 5 மணிக்கு தொழிலாளர் ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

கூட்டத்தில் தோழர் சண்முகசுந்தரம் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க சர்க்காரும் நிர்வாகமும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

★

கொளத்தூர்:

7—7—54 புதன் மாலை

பேசுவோர் :

ஈ. வே. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

வடுகபட்டி

கருணாநிதி திடலில்

7—7—54 புதன் மாலை

தலைவர் : எஸ். கோவிந்தராசலு

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

எஸ். முத்து

மு வசனப்பித்தன்

இலவச ஆரம்பப் பாடசாலை திறப்பு விழா

திருவொற்றியூர், பெரியசாமி கிழமாட வீதி, 430 எண்ணுள்ள கட்டிடத்தில் 6-6-54 மாலை 6-மணிக்கு திரு. டி. சண்முகம் எம். எல். ஏ, அவர்கள் தலைமையில் "எம். எஸ். முத்துகிருஷ்ணன் இலவச ஆரம்பப் பாடசாலை"யை தோழர் டி. கே. சண்முகம் திறந்து வைப்பார். தோழர்கள் சேலையாளர் என். எஸ். கிருஷ்ணன், எம். ஆர். ராதா, டி. என். பாலையா, கே. ஆர். ராமசாமி, சிவாஜி கணேசன், டி. வி நாராயணசாமி முதலியோர் "இளமையிற் கல்" என்னும் பொருள்பற்றி பேசுவார்கள்.

ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு சுற்றுப்பயணம்

★

ஜூலை 7: கொளத்தூர்
8: மேச்சேரி
9: நங்கவள்ளி
13: இராசசிங்கமங்கலம்
14: மூலூர்
15: ஈரோடு (திருமணம்)
18: உறையூர்

தூத்துக்குடி M. ரத்தினம் சுற்றுப் பயணம்

★

ஜூலை 6: தென் திருப்பேரை
„ 7: அம்மன்புரம்
„ 8: மங்களக்குறிச்சி
„ 9: திருச்செந்தூர்

முக்கூடலில் 144 தடை உத்திரவு

மீண்டும் நீடிப்பு

முக்கூடல், ஜூலை 2—

இவ்வூரில் தி மு. கழகத்தினருக்கும், காங்கிரஸ் கமிட்டியாருக்கும் 'பாண்டியனூர் திடல்' 'பேரன் சதுக்கம்' என்ற பெயரின் காரணமாக இருவருக்கும் தகராறு ஏற்பட்டதால், அந்த இடத்தில் எவரும் பொதுக்கூட்டம் நடத்தக்கூடாது என அம்பா சமுத்திரம் மாஜிஸ்திரேட் 2 தடவை 144 தடை உத்திரவை பிறப்பித்திருந்தார். மீண்டும் 3-வது தடவையாக மாஜிஸ்திரேட் அவர்கள் 26—6—54 முதல் 2 மாத காலத்திற்கு தடை உத்திரவை நீடித்துள்ளார்.

கேலிக்கூத்தல்லவே!

கல்கத்தாவில் குடிக்க கிராணம் ஏற்க முடியாது போய்விட்ட போதிலும், கிராண காலத்தில் நூற்றுக்கணக்கான இந்துக்கள் கங்கையில் 'புனித' முழுக்குப் போட்டு தங்கள் 'பாபங்களைக் கழுவிக் கொண்டனராம். அந்த 'புண்ணிய ஸ்நானத்தி'றகுப் பிறகு ஏழைகளுக்கு உணவளித்தனராம் அந்தப் 'புண்ணியாத்மாக்கள்'!

செய்திக்கதிர்

புகையிலை எண்ணெய்

புகையிலை எண்ணெய் வகைகளை ஆகார வகை எண்ணெயாக மத்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கின்றனர். இந்தியாவில் உற்பத்தியாகும் 10,000 டன் புகையிலை விதையின் சரிபாதியில் நல்ல எண்ணெய் உள்ளது.

★

ஒப்பந்தம்

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளில் உள்ள மத சம்பந்தமான பிரதேசங்களைப் பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுப்பது பற்றி இரு நாடுகளிடையேயும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

★

மகிழ்ச்சி

தென் இந்தியாவின் இயற்கை அழகும், மக்களின் பழக்க வழக்கங்களும் தனக்கு மிகவும் பிடித்திருந்ததாக தென்னாடு வந்துள்ள இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவி சாவித்திரி தேவி நிகாம் கூறினார்.

★

அணு கடிகாரம்

அணுவைப் பிளப்பதால் ஏற்படும் சக்தியால் இயங்கும் கடிகாரம் ஒன்றை டில்லி தேசிய பௌதிக ஆராய்ச்சி நிலையம் முயற்சித்து வருகிறது.

★

மாநாடு

தெற்கு தென் கிழக்கு ஆசிய பொருளாதார அபிவிருத்திக்கும், ஆசிய நாடுகளிடையே வர்த்தக அபிவிருத்திக்கும் திட்டமிட தென் கிழக்காசியப் பொருளாதார மாநாடொன்று நவம்பரில் நடைபெறும் என்று தெரிகிறது.

★

வெள்ளம்

கோசி நதியில் வெள்ளம் ஏற்பட்டதால் 300 கிராமங்கள் மூழ்கின என்றும், 3 லட்சம் மக்கள் வீடிழந்துவிட்டனர் என்றும் தெரிகிறது. விஷப்பாம்புகள் வெள்ளத்தால் வெளியேறத் தொடங்கி அலைகளால் கடிக்கப்பட்டுப் பலர் மாண்டுபோகின்றனர்.

★

போதனை

பள்ளிகளில் காந்தியத் தத்துவம் பற்றி போதிப்பதற்கான முறையினைச் சிபார்சு செய்ய தென் இந்திய ஆசிரியர் சங்கம் உப கமிட்டி ஒன்றை நியமித்திருக்கிறது.

★

கால்நடை

பெங்களூரில் ஒரு மத்திய செயற்கை சினைப்படுத்தும் நிலையம் விரைவில் ஆரம்பமாகும் எனத் தெரிகிறது. இந்நிலையம் விவசாய ஆராய்ச்சி இந்தியக் கவுன்சிலால் சாங்ஷன் செய்யப்பட்டது.

★

உத்தரவு

தேச விரோதமான காரியங்களில் ஈடுபட்டதாக பம்பாய் இந்தோ—சோவியத் கலாசார சங்கக் காரியதரிசி ஜாம்பியா வீ கான் என்பவரை 48 மணி நேரத்தில் இந்தியாவைவிட்டு வெளியேறும்படி மத்திய சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் [illegible] இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அரசு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது (இ, [illegible] நாராயண செட்டித் தெரு, [illegible]) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை, எம். ஏ.